புதிய பாரதக் கல்வியறிவுத் திட்டம்

புத்தொளி

(சுருக்கம்)

PREPARED BY

STATE TRAINING CENTRE
STATE CENTRE FOR LITERACY
PUDUCHERRY

புத்தொளி

(சுருக்கம்)

முகவுரை

கல்வி ஒரு மனிதனை மேன்மை அடையச் செய்யும். தேசிய கல்விக் கொள்கை 2020 இல் கூறியுள்ளதைக் கருத்தில் கொண்டு, ‘அனைவருக்கும் கல்வி’ என்ற நோக்கோடு ‘உல்லாஸ்’ என்னும் ‘புதிய பாரத கல்வியறிவுத் திட்டம்’ செயல்படுகின்றது. 15 வயதிற்கு மேற்பட்ட கல்லாதவர் அனைவருக்கும் கல்வியறிவை வழங்கி புதுச்சேரியை 100 சதவீத கல்வியறிவு பெற்ற மாநிலமாக மாற்றுவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு மட்டுமல்லாமல் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழத் தேவையான வாழ்க்கைத் திறன்களையும் இத்திட்டம் அளிக்கின்றது. இத்திட்டத்தில் சேரும் கல்லாதவர் நிதிசார் கல்வி, சட்டக் கல்வி, டிஜிட்டல் கல்வி உள்ளிட்ட வாழ்க்கைத் திறன்களை அறிந்து கொள்வர். இவற்றுடன் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள உதவும் தொழில்சார் கல்வி; தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைக் கல்விக்கு இணையான அடிப்படைக் கல்வி; அவர்களின் தனித் திறன்களை வளர்த்துக் கொள்ளும் தொடர்கல்வி போன்றவையும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன.

‘புத்தொளி’ புத்தகம் 13 பாடங்களை உள்ளடக்கிய நான்கு தொகுதிகளைக் கொண்டது. அப்புத்தகம் கற்போரின் தேவை மற்றும் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு ‘புத்தொளி (சுருக்கம்)’ என்னும் பெயரில் 7 பாடங்களை உள்ளடக்கிய புத்தகமாகச் சுருக்கப்பட்டுள்ளது. வாக்களித்தல், நல்வாழ்வும் சுகாதாரமும், சட்ட அறிவு ஆகிய வாழ்க்கைத் திறன்கள் இச்சுருக்கப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. பல வண்ணப்படங்களும் வாழ்க்கைச் சார்ந்த கணக்குகளும் கொண்டு இச்சுருக்கப்புத்தகம் சிறப்புற உருவாக்கப்பட்டுள்ளது.

வாழ்த்துச் செய்தி

பள்ளிக்கல்வி இயக்குநரகம் பள்ளிக்கல்வி மட்டுமல்லாது வயதுவந்தோர் கல்வியிலும் கவனம் செலுத்தி வருகின்றது. 'வயதுவந்தோர் 'கல்வி' என்ற சொல்லாடல் 'அனைவருக்கும் கல்வி' என்று மாற்றம் பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது. காரணம், கல்வி என்பது அனைவரையும் சென்றடைய வேண்டியது. கல்விக்கு வயது ஒரு தடையே இல்லை. கற்றல், வாழ்க்கை முழுதும் நடக்கும் ஒரு தொடர் செயல். உண்மையில் எல்லாவற்றையும் கற்றவர் என்று இங்கு ஒருவரும் இல்லை. ஒரு மொழியைத் தெரிந்தவருக்கு மற்றொரு மொழி தெரியாது. ஒரு தொழில்நுட்பத்தை அறிந்தவருக்கு மற்றொரு தொழில்நுட்பம் தெரியாது. ஒரு கலையை அறிந்தவருக்கு மற்றொரு கலை தெரியாது. தனக்குத் தெரியவில்லை என்று ஏற்றுக்கொள்ளுதலும் அறியாதவற்றைக் கற்றிட முன்வருதலும் இன்றைய சூழலில் அவசியமானதாகும்.

அப்படித் தொடர்ந்து கற்பவரே அவர் ஏற்றிருக்கும் துறையில் முன்னிலை அடைய முடியும். இதன் அடிப்படையிலேயே 'புதிய பாரதக் கல்வியறிவுத் திட்டம்' உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் எழுதப் படிக்கக் கற்றுத்தருவதோடு நின்று விடவில்லை. அவற்றோடு வாழ்க்கைத் திறன்களைக் கற்றுத்தருகின்றது. நல்வாழ்வு மற்றும் சுகாதாரம் தொடர்பான திட்டங்களையும் அதன்மூலம் பொதுமக்கள் பெறத்தக்க பயன்களையும் எடுத்துரைக்கின்றது. தேர்தல் மற்றும் வாக்களித்தல் குறித்த விழிப்புணர்வையும் வழிமுறைகளையும் தெளிவுபடுத்துகின்றது. சட்ட அறிவை வழங்குகின்றது. இப்படி வாழ்க்கைத் திறன்களைக் கற்றுத்தருகின்றது.

அடிப்படை எண்ணறிவு, எழுத்தறிவு மற்றும் வாழ்க்கைத்திறன்களை அளிக்கும் வண்ணம் மிகச்சிறந்த முறையில் 'புத்தொளி(சுருக்கம்)' உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் உருவாவதற்குக் காரணமாக இருந்த அனைவருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதனை உரியமுறையில் கற்போரிடம் கொண்டு சேர்க்கும் பணியைத் தன்னார்வ ஆசிரியர்கள் ஏற்றுள்ளனர். அவர்களின் அர்ப்பணிப்பாலும் கற்போர்களின் ஊக்கத்தாலும் அறிவு என்னும் ஒளி எங்கும் பரவிப்பிரகாசிக்கும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது.

பி. பிரியதர்ஷினி,

இயக்குநர்,

பள்ளிக்கல்வி இயக்ககம், புதுச்சேரி.

வாழ்த்துச் செய்தி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

என்ற வள்ளுவரின் வாக்குப்படி எண்ணறிவும் எழுத்தறிவும் மனிதருக்குக் கண்களைப் போன்றது. கண் உலகைக் காணச் செய்கின்றது. எண்ணறிவும் எழுத்தறிவும் உலகில் மரியாதையுடன் வாழ வழிசெய்கின்றது.

அப்படிப்பட்ட மதிப்புமிக்க வாழ்க்கையை அனைவருக்கும் உறுதிசெய்ய ‘உல்லாஸ்’ என்னும் ‘புதிய பாரதக் கல்வியறிவுத் திட்டம்’ பாரதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனைப் புதுச்சேரியில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மாநில பயிற்சி மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதினைந்து வயதிற்கு மேற்பட்ட கல்லாதவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். இத்திட்டத்தின் மூலம் நேரடிவகுப்பிலும் மற்றும் இணையவழியிலும் கல்வி கற்கலாம்.

கற்றலுக்குப் பாடப்புத்தகம் அவசியமாகிறது. கற்பவரைக் கவரும் வகையில் ‘புத்தொளி (சுருக்கம்)’ என்னும் இப்புத்தகம் வண்ணத்தாளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. படித்தல், எழுதுதல், கணக்கிடுதல், சிந்தித்தவற்றை வரைதல், எழுதிப்பார்த்தல் போன்றவற்றை இப்புத்தகத்தில் செய்து கற்கலாம்.

இப்புத்தகம், புத்தக வடிவில் மட்டுமல்லாது இதன் பாடப்பொருள்கள் ஒலிக்கோப்பு, காணொளி, இணைய பயிற்சித்தாள், செயலி, இணைய விளையாட்டு போன்ற வடிவங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, கற்போர் வீட்டில் இருந்தபடியே கைப்பேசியின் துணைகொண்டு கற்க வகை செய்யும்.

எனவே, கல்லாதவர்கள் இத்திட்டத்தில் ஆர்வமுடன் சேர்ந்து பயின்று தேர்வெழுதி சான்றிதழ் பெற்றுத் தன்னம்பிக்கையோடு கற்றல் பயணத்தைத் தொடர என் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



திருமதி. சுகுணா சுகிர்த பாய்,
நோடல் அலுவலர் (உல்லாஸ்),
மாநில எழுத்தறிவு மையம்,
புதுச்சேரி.

புத்தக உருவாக்கல் குழு

Chairperson

Smt. P. Priytarshny, Director
Director of School Education,
Puducherry.

Vice-Chairperson

Smt. D. SougounaSouguirda Baye,
Nodal Officer, ULLAS,
Puducherry.

Coordinator

S. Rajkumar, Faculty,
State Training Centre, Puducherry

Translation -cum- Content Team

R. Bharathiraja, PST,
GPS Murungapakkam, Puducherry

B. Surendhar, PST,
GPS Indira Nagar, Puducherry

S. Sabarinathan, PST,
GPS Aranganur, Puducherry

S. Kavitha, PST,
GPS Manavely (A), Puducherry

S. Kayalvizhi, PST,
GHS Kalmandapam, Puducherry

K. Perumal, PST,
GPS Navarkulam, Puducherry

B. Sasireka, PST,
GMS T.N. Palayam, Puducherry

Review Committee

S. Poorna, Lecturer,

State Training Centre, Puducherry

R. Rajasekaran, Lecturer,

DIET, Puducherry

S. Thamizharasi, Lecturer,

DIET, Puducherry

S. Parimala, TGT,

GHS Pillayarkuppam, Puducherry

Dr. N. Mohanraj, TGT,

GHS Kodathur, Puducherry

Graphics & Layout

S. Sabarinathan, PST,

GPS Aranganur, Puducherry

நன்றி உரித்தாகுக

'புத்தொளி (சுருக்கம்)' என்னும் இந்நூல் உருவாகப் பலர் காரணமாக அமைந்துள்ளனர். அவர்களுக்கு நன்றி மலர்களை உரித்தாக்கக் கடமைப்பட்டுள்ளோம். இப்புத்தகத்தின் வழிகாட்டி நூலான 'உல்லாஸ் சுருக்கப் புத்தகத்தை' உருவாக்கிய நடுவண் அரசின் கல்வி அமைச்சகத்திற்கும் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கும் (NCERT) நன்றியை உரித்தாக்குகிறோம். தமிழில் 'புத்தொளி (சுருக்கம்)' உருவாகத் தேவையான வழிகாட்டுதலும் பயிற்சியும் அளித்து தொடந்து இணைப்பில் இருக்கும் தேசிய எழுத்தறிவு மையத்திற்கும் அதன் பொறுப்பாளர் பேராசிரியர் உஷா சர்மா அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

'புத்தொளி (சுருக்கம்)' கருவானது முதல் வண்ண நூலாய் உருவானது வரை பல்வேறு ஆளுமைகளின் சிந்தனையும் சொல்லும் செயலும் இதில் நிறைந்துள்ளது. அந்த வகையில் முதன்மையாக மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. ஆ. நமச்சிவாயம் அவர்களுக்கும் அரசுச் செயலர் (கல்வி) திரு. ஆஷிஷ் மாதவராவ் மோரே, இ.ஆ.ப., அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

ஆக்கமும் ஊக்கமும் தந்து எப்போதும் வழிநடத்தும் பள்ளிக்கல்வி இயக்குநர் திருமதி. பி. பிரியதர்ஷினி அவர்களுக்கும் உறுதுணையாக இருந்த ஏனைய பள்ளிக்கல்வி அதிகாரிகளுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம். மாநில பயிற்சி மையம் மற்றும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பில் இருந்து தம் நேரடிப் பார்வையில் புத்தக உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்த சிறப்புப் பணி அலுவலர் திருமதி. சுகுணா சுகிர்த பாய் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம். மாநில பயிற்சி மையம் மற்றும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

இதன் உருவாக்கத்தில் பல்வேறு குழுக்கள் பணியாற்றின. ஒருங்கிணைப்பு, படைப்பாக்கம், மறுசீராய்வு, கணினி வடிவமைப்பு என்று இதன் ஆக்கத்தில் பங்களித்த அனைவருக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

தன்னார்வல ஆசிரியருக்கு

'உல்லாஸ்' என்னும் இத்திட்டம் தன்னார்வ அடிப்படையிலானது. இத்திட்டத்தின் வெற்றி தன்னார்வ ஆசிரியர்களின் செயல்திறனால் முன்நகர்த்தப்படுவது. ஒரு தீபம் பற்பல தீபங்களை உருவாக்குவது போல, தான் கற்ற கல்வியைப் பிறருக்குக் கற்பித்து அறிவுக்கொடை அளிக்கும் ஆர்வம் உள்ள எவரும் தன்னார்வல ஆசிரியராகப் பணியாற்றலாம்.

கற்றல் பயனுள்ளதாகவும் மகிழ்வானதாகவும் அமையும் போது கற்போர் ஆர்வமுடன் கற்க முன்வருவர். கற்போரின் தேவைகளுக்கு ஏற்ப படித்தல், எழுதுதல், கணக்கிடுதல், தேவையான வாழ்க்கைத்திறன் பெறுதல் போன்றவற்றை உள்ளடக்கி இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தில் மக்கள் பொதுவாகப் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் கற்பிக்கும்போது அவர்களின் கருத்தை அவர்கள் அறிந்த சொற்களைக் கொண்டு விளக்க உரிமை அளிக்க வேண்டும். கலந்துரையாடல்களை அவர்கள் அறிந்தவற்றிலிருந்து தொடங்கலாம். இதிலுள்ள படங்களும் சொற்களும் வழிகாட்டலுக்காக மட்டுமே. மேலதிக சொற்களையும் படங்களையும் ஆசிரியர் தன் முயற்சியில் சேகரித்துப் பயிற்றுவிக்கலாம்.

சொற்களை எழுத்துக்கூட்டிப்படித்தல், பார்த்துப்படித்தல், சொற்களை ஊகித்துப்படித்தல் போன்ற பல்வேறு வழிகளில் வாசிக்க பயிற்றுவிக்கலாம். கூடுமானவரையில் எழுதப்பயிற்சி அளிக்கலாம். ஒவ்வொரு பாடத்திற்கும் போதுமான அளவில் பணித்தாள்களைப் பயன்படுத்தவும். பாடம் நடத்தியபிறகு மதிப்பீட்டுத்தாள்களைக் கொண்டு அவர்களின் கற்றல் அடைவைக் கண்டறிந்து அதற்கேற்றார்போல் குறைதீர் கற்பித்தலில் ஈடுபடவும். கணக்குகள் வாழ்க்கைச் சூழலோடும் வாழ்க்கைத் திறன்களோடும் இணைத்து இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அதனை அவர்களின் வாழ்க்கைச் சூழலோடுத் தொடர்புபடுத்திக் கற்பிக்கவும்.

பாடத்தின் இறுதியில் பயிற்றுநருக்கான வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளவாறு செயல்படலாம். எழுத்தறிவிற்கும் எண்ணறிவிற்கும் கற்றல் அடைவுகள் இறுதிசெய்யப்பட்டுள்ளன. அந்தக் கற்றல் அடைவுகளை எந்தெந்தக் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளின் மூலம் அடையலாம் என்னும் விளக்கக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், தன்னார்வ ஆசிரியர் எதைக் கற்பிக்க வேண்டும் எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல் நிறைய உள்ளது. ஊக்கம் என்னும் உந்து சக்தியை உள்ளத்தில் தாங்கி, கற்பிக்கத் தொடங்கும் ஆசிரியர், கற்பித்தலுக்குத் தேவையான அனைத்தையும் ஊக்கத்தின்வழி தானே கண்டடைவார்.

ஊக்கமதைக் கைவிடேல்!

பொருளடக்கம்

முகவுரை	iii
வாழ்த்துச் செய்தி	v
வாழ்த்துச் செய்தி	vii
புத்தக உருவாக்கல் குழு	viii
நன்றி உரித்தாகுக	ix
தன்னார்வல ஆசிரியருக்கு	x
1. குடும்பமும் சுற்றுப்புறமும்	2-17
2. தகவல் தொடர்பு	18-37
3. நமது வாழ்க்கை முறை	38-59
4. அக்கம் பக்கம்	60-77
5. உணவும் நல்வாழ்வும்	78-91
6. வாக்கு	92-103
7. சட்ட தகவல்	104-113

எனது புத்தகம்

என் பெயர் ________________________

என் முகவரி ________________________

____

____

என் கைப்பேசி எண் ________________________

அழகர் இல்லம்
தி காலணியகம்
புன்னகை துணிக்கடை
7
3
4

கலந்துரையாடுவோம்

1. இந்தப் படத்தில் எத்தனை கடைகள் உள்ளன?
2. இப்படத்தில் யார் யார் என்னென்ன செய்கிறார்கள்?
3. உங்கள் ஊரில் என்னென்ன வகையான வீடுகள் உள்ளன?
4. இந்தப் படத்தில் எத்தனை குழந்தைகள் உள்ளனர்?
5. இந்தப் படத்தில் எண் 4 எங்கே எழுதப்பட்டுள்ளது?
6. 'மதி காலணியகத்தை', அடுத்து எந்தக் கடை உள்ளது?
7. ஆலமரத்தின் அடியில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

1 குடும்பமும் சுற்றுப்புறமும்

நாங்கள் கற்போம்

அ	ஆ	க்	ச்	ட்	த்	ப்	ற்

- 1 முதல் 20 வரையிலான எண்களை அறிதல், படித்தல் மற்றும் எழுதுதல்

பார்ப்போம்! படிப்போம்!



கடை

அப்பா அம்மா

ஆலமரம்

சமையலறை

படிப்போம் எழுதுவோம்

அ

அம்மி

ஆ

ஆறு

அ

ஆ

க

கண்

கா

காகம்

க

கா

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:

படத்தை ஒவ்வொன்றாக அடையாளம் காண கற்போருக்கு உதவுங்கள். படத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை விரல் வைத்துப் படிக்க உதவுங்கள். பங்கேற்பாளர்கள் எழுத்துகளை எழுத உதவுங்கள். ஒலி வடிவத்திற்கும் எழுத்து வடிவத்திற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குங்கள். இதேபோல், மீதமுள்ள எழுத்துகளைப் படிக்கவும் எழுதவும் உதவுங்கள்.

ச

சட்டி

சா

சாட்டை

ச

சா

ட



படகு

டா

பட்டாசு

ட

டா

த

தங்கம்

தா

தாத்தா

ப



பம்பரம்

பா

பானை

ற



முறம்

றா



புறா

ற றா

■ படித்துப் பழகுக.

அம்மா	ஆப்பம்	கடல்	காடை
சணல்	சாலை	பட்டம்	கூடாரம்
தாழ்ப்பாள்	பணம்	பாடகர்	பறவை

■ சொற்களை அடையாளம் கண்டு வட்டமிக.

ஆ	ப	ட்	டா	சு
று	பு	றா	ண்	ர
ப	ற	கு	ட	ம்
மு	னை	கா	க	ம்
பா	த	ங்	க	ம்

பார்க்க படிக்க எழுதுக:

'அ' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

ஆப்பம் அம்மா ஆடு கண்

'ஆ' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

படம் காடு ஆலமரம் கடை

'க' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

கப்பல் மாடு பட்டம் முறுக்கு

'ச' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

படம் சக்கரம் அப்பா மண்

'ட' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

அணில் வானம் கண் படகு

'த' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

அண்ணன் சட்டி காகம் தச்சர்

'ப' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

படம் பாடம் கடை வண்டி

'ற' என்ற எழுத்தில் தொடங்கும் சொல்லை எடுத்து எழுதுக-

முறம் பகல் சாக்கு அம்மி

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
பங்கேற்பாளர்களுக்குச் சொற்களைப் படிக்கவும் எழுதவும் வாய்ப்பளியுங்கள். கொடுக்கப்பட்ட எழுத்துகளில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து எழுதச் செய்யுங்கள்.

■ பொருள்களை எண்ணி அதற்குரிய எண்ணை அடையாளம் காண்க.

1

ஒரு படகு

2

இரண்டு கொலுசுகள்



3

மூன்று பூரிக்கட்டைகள்



4

நான்கு மாம்பழங்கள்

5

ஐந்து வீடுகள்



6

ஆறு கொக்குகள்



7

ஏழு பானைகள்



8

எட்டு தண்ணீர்க்குழாய்கள்



9

ஒன்பது சாவிகள்

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
பொருள்களை எண்ணி அதற்குரிய எண்ணை அடையாளம் காணவும், சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்களை எண்ணுவதற்கும் பங்கேற்பாளர்களுக்குப் பயிற்சி அளியுங்கள்.

சொல்வோம்! எழுதுவோம்!

1	1		6	6	
2	2		7	7	
3	3		8	8	
4	4		9	9	
5	5				

கைப்பேசியில் உள்ள எண்கள் என்னென்ன?

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
கைப்பேசியிலுள்ள எண்களை புள்ளியிடப்பட்ட கோடுகளின் மீது சொல்லிக்கொண்டே எழுத பயிற்சி அளிக்கவும். மேலும் பயிற்சி தேவைப்படும் பங்கேற்பாளர்களுக்குப் பலமுறை பயிற்சி செய்ய வாய்ப்பளிக்கவும். பங்கேற்பாளரின் கைப்பேசியில் உள்ள பொத்தான்களில் எழுதப்பட்ட எண்களின் வடிவத்தை அடையாளம் கண்டு, அதன் அடிப்படையில் எண்களை (1 முதல் 9 வரை) எழுத முயற்சிக்க உதவவும்.

- **மாறன் குடும்பம் மாட்டு வண்டியில் செல்கிறது. உற்று நோக்குக. எண்ணிக்கையில் எழுதுக.**



மாட்டு வண்டியில் எத்தனைப் பேர் இருக்கிறார்கள்?	
மாட்டு வண்டியில் எத்தனை ஆண்கள் உள்ளனர்?	
மாட்டு வண்டியில் எத்தனைப் பெண்கள் உள்ளனர்?	
கூடையில் எத்தனைத் தர்பூசணிகள் உள்ளன?	
மாட்டு வண்டியில் எத்தனைச் சக்கரங்கள் உள்ளன?	
மாட்டு வண்டியில் எத்தனை விளக்குகள் உள்ளன?	

- **விடுபட்ட எண்களை நிரப்புக.**

1		3	4		6			9

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
பொருள்களை எண்ணிச் சொல்லவும் எழுதவும் பங்கேற்பாளர்களுக்கு உதவுங்கள். சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்களை எண்ணி எழுத ஊக்கமளியுங்கள்.

எண்ணி எழுதுவோம்



பத்துக் குழாய்கள் 10



பதினோரு படுக்கைகள் 11



பன்னிரண்டு இலைகள் 12

பதின்மூன்று பம்பரங்கள் 13



பதினான்கு பட்டங்கள் 14

பதினைந்து பூக்கள் 15



பதினாறு தேங்காய்கள் 16

பதினேழு மாதுளம் பழங்கள் 17



பதினெட்டு மீன்கள் 18



பத்தொன்பது முத்துக்கள் 19



இருபது தீக்குச்சிகள் 20

■ விடுபட்ட எண்களை நிரப்புக.

10		12		14	15		17			20

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
பொருள்களை எண்ணிச் சொல்லவும் எழுதவும் பங்கேற்பாளர்களுக்கு உதவுங்கள். சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்களை எண்ணி எழுத ஊக்கமளியுங்கள்.

பயிற்சி

1. கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளை சொற்களில் கண்டறிந்து வட்டமிடுக.

அ	–	அம்மி	அணில்
ஆ	–	ஆப்பம்	ஆறு
க்	–	சக்கரம்	விக்கல்
ச்	–	தச்சர்	அச்சாணி
ட்	–	பட்டாசு	சட்டி
த்	–	தாத்தா	சித்தி
ப்	–	பாப்பா	தாழ்ப்பாள்
ற்	–	காற்று	நாற்று

2. பின்வரும் எழுத்துகளைப் படித்து எழுதிப் பழகுக.

அ ஆ க் ச் ட் த் ப் ற்

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.




.....ணல் .....ம்பரம் ப.....கு .....ண்

4. பின்வரும் கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து வட்டமிடுக.

ஆ	த	ங்	க	ம்
று	பு	றா	ண்	ர
மு	ற	ம்	ண	ப
ம்	னை	கா	க	ம்
பா	ப	ட்	டா	சு

5. எண்ணி எழுதுக.

	

6. விடுபட்ட எண்களை நிரப்புக.

1		3	4					9

7. எண்ணி எழுதுக.

			
			

5. விடுபட்ட எண்களை நிரப்புக.

10	11			14		16		18		20

அஞ்சல் நிலையம்
புதுச்சேரி
கடிதம்

கலந்துரையாடுவோம்

1. தம் கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவிக்க இந்தப் படத்தில் என்னென்ன முறைகள் பயன்படுத்தப்படுகின்றன?
2. நீங்கள் எப்போதாவது அஞ்சல் நிலையத்திற்கு சென்றிருக்கிறீர்களா?
3. நீங்கள் எதற்காக அஞ்சல் நிலையத்திற்குச் செல்கிறீர்கள்?
4. எந்தெந்த வழிகளில் செய்திகளைப் பெறுகிறோம்?
5. பேசுவதைத் தவிர, வேறு எதற்காக கைப்பேசியைப் பயன்படுத்துகிறீர்கள்?

2 தகவல் தொடர்பு

நாங்கள் கற்போம்

இ	ஈ	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்

- 21 முதல் 50 வரையிலான எண்களை அறிதல், படித்தல் மற்றும் எழுதுதல்.
- 1 முதல் 50 வரையுள்ள எண்களைக் கொண்டு கூட்டல், கழித்தல் கணக்குகள் செய்தல்.
- ஒன்று மற்றும் பத்து குழுக்களாக எண்ணுதல்.

பார்ப்போம்! படிப்போம்!

செய்தித்தாள்

அஞ்சல் பெட்டி

உரையாடல்

அலைபேசி

படிப்போம் எழுதுவோம்

இ

இலை

ஈ

ஈட்டி

ய

முயல்

யா

யானை

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
படத்தை ஒவ்வொன்றாக அடையாளம் காண கற்போருக்கு உதவுங்கள். படத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை விரல் வைத்துப் படிக்க உதவுங்கள். பங்கேற்பாளர்கள் எழுத்துகளை எழுதவும் உதவுங்கள். ஒலி வடிவத்திற்கும் எழுத்து வடிவத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் விளக்குங்கள். இதேபோல், மீதமுள்ள எழுத்துகளைப் படிக்கவும் எழுதவும் உதவுங்கள்.

யி



மயில்

யீ

நுரையீரல்

ர

மரம்

ரா

ராணி

ரி

நரி

ரீ

கிரீடம்

ல

மலர்

லா

பலா

லி

எலி

லீ



கல்லீரல்

லி லீ

வ

வண்டு

வா

வாத்து

வ வா

வி

விசிறி

வீ

வீடு

வி

வீ

ழ

பழம்

ழா

குழாய்

ழ

ழா

ழி

கோழி

ழி

தோழி

ழி ழி

ள

அப்பளம்

ளா

காளான்

ள ளா

ளி

கிளி

ளீ



கேளீர்

ளி ளீ

■ **பின்வரும் எழுத்துகளைப் படித்து எழுதிப் பழகுக.**

இ ஈ ய் ர் ல் வ் ழ் ள்

■ **விடுபட்ட எழுத்துகளை நிரப்புக.**

ம.....ம்

.....ண்டு

அப்ப.....ம்

ப.....ம்

- **பின்வரும் சொற்றொடர்களைப் படிக்க.**

1. அணில் மரத்தில் ஏறியது.

2. பட்டம் காற்றில் பறந்தது.

3. அம்மா பழம் தந்தாள்.

4. இளவரசி வாள் வீசினாள்.

5. மயில் அழகாக ஆடியது.

- **பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.**

....

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
எழுத்துக்களை அடையாளம் கண்டு அவற்றுடன் தொடர்புடைய வார்த்தைகளை எழுத மாணவர்களை ஊக்குவிக்கவும்.
கற்பவர்களுக்கு வார்த்தைகளைப் படிக்க உதவுங்கள். எழுத்துக்கள், அவற்றுடன் தொடர்புடைய சொற்களை அடையாளம் காணவும், சிறு வாக்கியங்களை எழுதவும் மாணவர்களை ஊக்குவிக்கவும்.

- **மகிழன் வீட்டில் 5 பேர் உள்ளனர். மேலும் 4 பேர் ஊரிலிருந்து வந்தனர். இப்போது மகிழன் வீட்டில் மொத்தம் எத்தனை பேர் இருப்பர்?.**

5 பேர்	மற்றும்	4	பேர் சேர்ந்து	9 பேர்
5	+	4	பேர் சேர்ந்து	9
5	+	4	=	9

$$5 + 4 = 9$$

$$\begin{array}{r} 5 \\ +\ 4 \\ \hline 9 \end{array}$$

- **கூட்டுக.**

$$\begin{array}{r} 13 \\ +\ 2 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 15 \\ +\ 3 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 12 \\ +\ 4 \\ \hline \\ \hline \end{array}$$

$7 + 2 = \square$

$13 + 4 = \square$

- **விடுபட்ட எண்களை நிரப்புக.**

அஞ்சல்காரர் முதல் நாள் 8 கடிதங்களை வழங்கினார். அடுத்த நாள் 3 கடிதங்களை வழங்கினார். அஞ்சல்காரர் மொத்தம் எத்தனை கடிதங்களை வழங்கினார்?

____

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:

+ மற்றும் – குறிகளை அடையாளம் காணவும், கணித செயல்பாடுகளைச் செய்யவும் கற்பவர்களுக்கு முடிந்தவரை பல வாய்ப்புகளை வழங்கவும். கணிதத்தில் இது கூட்டல் குறி, இது கழித்தல் குறி மற்றும் இது சமக்குறி என அடையாளம் காண உதவவும்.

- **ஒன்பது விளக்குகளில் இரண்டு பழுதடைந்துள்ளன. எத்தனை விளக்குகள் நல்ல நிலையில் உள்ளன?**



மொத்த விளக்குகள்



பழுதடைந்த விளக்குகள்

நல்ல நிலையில் உள்ள விளக்குகள்

9	விளக்குகளில்	2	விளக்குகள் பழுதடைந்தன	=	7	விளக்குகள் நல்ல நிலையில் உள்ளன
9	-	2	கழித்தால் மீதி	=	7	
9	-	2		=	7	

$9 - 2 = 7$ (அ)

$$\begin{array}{r} 9 \\ -\ 2 \\ \hline 7 \end{array}$$

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:

வாழ்க்கைக் கணக்குகளின் மூலம் இரண்டு எண்களைக் கூட்டவும் கழிக்கவும் பங்கேற்பாளர்களை ஊக்குவிக்கவும். ஓரிலக்க எண்களைக் கொண்டு கழித்தல் கணக்குகளைச் செய்ய பயிற்சி அளிக்கவும்.

- **கழித்தல்**

$$\begin{array}{r} 9 \\ -\ 3 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 6 \\ -\ 2 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 8 \\ -\ 4 \\ \hline \\ \hline \end{array}$$

$7 - 3 = \square$

$5 - 2 = \square$

- **ஆனந்த் 20 ரூபாய் வைத்திருக்கிறார், 15 ரூபாய்க்கு பழங்கள் வாங்கினார், இப்போது அவரிடம் மீதம் உள்ள ரூபாய் எவ்வளவு?**

____

- **எண்ணிக் கூட்டல் கற்போம்.**

ஓர் இனிப்புப் பெட்டியில் 10 லட்டுகள் உள்ளன. பார்த்துப் புரிந்துகொண்டு எழுதவும்.



20 + 1 = 21

2 பத்துகள் 1 ஒன்று — இருபத்து ஒன்று



20 + 2 = 22

2 பத்துகள் 2 ஒன்றுகள் — இருபத்து இரண்டு



20 + 3 = 23

2 பத்துகள் 3 ஒன்றுகள் — இருபத்து மூன்று

20 + 4 = 24

2 பத்துகள் 4 ஒன்றுகள் இருபத்து நான்கு



20 + 5 = 25

2 பத்துகள் 5 ஒன்றுகள் இருபத்து ஐந்து



20 + 6 = 26

2 பத்துகள் 6 ஒன்றுகள் இருபத்து ஆறு

20 + 7 = 27

2 பத்துகள் 7 ஒன்றுகள் இருபத்து எழு



20 + 8 = 28

2 பத்துகள் 8 ஒன்றுகள் இருபத்து எட்டு



20 + 9 = 29

2 பத்துகள் 9 ஒன்றுகள் இருபத்து ஒன்பது



20 + 10 = 30

2 பத்துகள் 10 ஒன்றுகள் முப்பது

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
மேற்கண்ட முறையில் எண்களைக் கூட்டி எழுதக் கற்போருக்கு உதவுங்கள்.

30	+	1	=	31
30	+	2	=	32
30	+	3	=	33
30	+	4	=	34
30	+	5	=	35
30	+	6	=	36
30	+	7	=	37
30	+	8	=	38
30	+	9	=	39
30	+	10	=	40

40	+	1	=	41
40	+	2	=	42
40	+	3	=	43
40	+	4	=	44
40	+	5	=	45
40	+	6	=	46
40	+	7	=	47
40	+	8	=	48
40	+	9	=	49
40	+	10	=	50

- **ஒரு பெட்டியில் 10 தீக்குச்சிகள் உள்ளன. மொத்த குச்சிகளின் எண்ணிக்கையை எழுதவும்.**

		___ + ___ = ___
		___ + ___ = ___

- பின்வரும் 10 ரூபாய்த் தாள்கள் மற்றும் 1 ரூபாய் நாணயங்களைக் கூட்டினால் எவ்வளவு ரூபாய் கிடைக்கும் என்பதை ஊகித்து பதில் எழுதுக.

	10 ரூபாய் தாள்கள்		1 ரூபாய் நாணயங்கள்		மொத்தம் ரூ.
(அ)		+		=	34
(ஆ)		+		=	

- கூட்டி எழுதுக.

$$\begin{array}{r} 40 \\ +\ 5 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 30 \\ +\ 7 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 40 \\ +\ 10 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 25 \\ +\ 12 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 32 \\ +\ 15 \\ \hline \\ \hline \end{array}$$

$27 + 12 = \square$ $\qquad$ $32 + 11 = \square$

$22 + 14 = \square$ $\qquad$ $15 + 25 = \square$

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
மேற்கண்ட எடுத்துக்காட்டுகளின் மூலம் கற்போரிடையே ஒன்றுகள் மற்றும் பத்துகளைப் பற்றிய புரிதலை உருவாக்கவும். சொந்த அனுபவங்களின் மூலம் இவற்றைச் செய்ய வாய்ப்பளிக்கவும். பல எண்களைத் தேர்ந்தெடுத்து அதில் எத்தனை பத்துகள், எத்தனை ஒன்றுகள் உள்ளன என்பதைக் கண்டறிய ஊக்குவிக்கவும்.

■ கழித்து விடை காண்க.

48	36	42	49
− 32	− 13	− 21	− 19
____	____	____	____

$39 - 23 = \square$ $45 - 31 = \square$

$29 - 12 = \square$ $37 - 15 = \square$

■ உங்களிடம் சில 10 ரூபாய் தாள்கள் மற்றும் 1 ரூபாய் நாணயங்கள் உள்ளன. கடைக்காரருக்குப் பொருட்களின் தொகையை எப்படிக் கொடுப்பீர்கள் எனக் கண்டறிந்து எழுதுக.

மதிப்பு	பொருட்கள்	10 ரூபாய் தாள்கள்	1 ரூபாய் நாணயங்கள்
₹29	தக்காளி		
₹42	பணியாரம்		
₹40	வாழைப்பழம்		
₹15	மாங்காய்		

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
ரூபாயின் குறியீட்டை (₹) அறிமுகம் செய்யவும்.

பயிற்சி

1. கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளை சொற்களில் கண்டறிந்து வட்டமிடுக.

இ	–	இலை	இட்லி
ஈ	–	ஈ	ஈட்டி
ர	–	மரம்	சக்கரம்
ல	–	கோலம்	மலர்
வி	–	விசிறி	சாவி
ழி	–	கோழி	அகழி

2. பின்வரும் எழுத்துகளைப் படித்து எழுதிப் பழகுக.

இட்லி எலி வாத்து

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.

கா......ன் ......டு ......னை ந......

4. படங்களின் பெயர்களை எழுதுக.

....

5. கூட்டி எழுதுக.

$$\begin{array}{r} 13 \\ +\ 32 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 36 \\ +\ 4 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 20 \\ +\ 15 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 27 \\ +\ 12 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 32 \\ +\ 11 \\ \hline \\ \hline \end{array}$$

6. கழித்து விடை காண்க.

$$\begin{array}{r} 9 \\ -\ 3 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 8 \\ -\ 4 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 36 \\ -\ 12 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 45 \\ -\ 21 \\ \hline \\ \hline \end{array} \quad \begin{array}{r} 37 \\ -\ 15 \\ \hline \\ \hline \end{array}$$

7. கணக்கிடுக.

 = ________

8. கோடிட்ட இடங்களை நிரப்புக.

30 + 5 = ________ 40 + 5 = ________

40 + 2 = ________ 40 + 10 = ________

9. பின்வரும் தொகைக்கு எத்தனை 10 ரூபாய், 1 ரூபாய் நாணயங்களைக் கொடுப்பீர்கள் என நிரப்புக.

மதிப்பு	10 ரூபாய் தாள்கள்	1 ரூபாய் நாணயங்கள்
₹42		
₹29		

கலந்துரையாடுவோம்

1. இந்தப் படத்தில் நீங்கள் என்னென்ன பார்க்கிறீர்கள்?
2. படத்தில் யார்யார் என்னென்ன செய்கிறார்கள்?
3. படத்தில் எத்தனைக் கடைகள் உள்ளன?
4. படத்தில் இருப்பதைப் போல உங்கள் வீட்டிற்கு அருகில் என்னென்ன கடைகள் இருக்கின்றன?

ராணி அழகு நிலையம்
பீட்டர் மருந்தகம்
ரமணி இனிப்புக்கடை
தென்றல் இசைக்குழு
கரீம் பிரியாணி

3 நமது வாழ்க்கை முறை

நாங்கள் கற்போம்

ஒ ஓ ஔ ங் ஞ் ண் ந் ம் ன்

- 51 முதல் 1000 வரையிலான எண்களை அறிதல், படித்தல் மற்றும் எழுதுதல்
- ஒன்றுகள், பத்துகள் மற்றும் நூறுகளில் எண்ணுதல் (இட மதிப்பு)
- 2 இலக்க எண்களின் கூட்டல் மற்றும் கழித்தல்
- ஒரு இலக்க எண்களை பெருக்குதல்
- 100 குழுக்களாக எண்ணுதல்

பார்ப்போம்! படிப்போம்!

கொண்டாட்டம்



ஓடம்

நடனம்

மஞ்சள்

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:

கற்போரை, அனைத்துப் படங்களையும் ஒவ்வொன்றாக அடையாளம் காண உதவவும். அவற்றுடன் தொடர்புடைய சொற்கள் படங்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், சொற்களைக் கண்டறிந்து விரல் வைத்துப் படிக்க ஊக்குவிக்கவும்.

படிப்போம் எழுதுவோம்

ஒ

ஒன்பது

ஓ



ஓலை

ஒ ஓ

ஔ

ஔவை

ங்

தேங்காய்

ஔ ங்

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:

படத்தை ஒவ்வொன்றாக அடையாளம் காண கற்போருக்கு உதவுங்கள். படத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை விரல் வைத்துப் படிக்க உதவுங்கள். பங்கேற்பாளர்கள் எழுத்துகளை எழுதவும் உதவுங்கள். ஒலி வடிவத்திற்கும் எழுத்து வடிவத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் விளக்குங்கள். இதேபோல், மீதமுள்ள எழுத்துகளைப் படிக்கவும் எழுதவும் உதவுங்கள்.

ஞ்

மஞ்சள்

ண்

கண்ணாடி

ந்

பந்து

ம்



மாம்பழம்

ன்

தென்னை

ன்

மீன்

ன் ன்

ந



நகம்

நா

நாய்

ந நா

ம

மரம்

மா

மான்

ம

மா

மி

மிளகு

மீ

மீன்கொத்தி

மி

மீ

மொ

மொட்டு

மோ

மோதிரம்

ண

பணம்

ணா

கண்ணாடி

ணி



ஏணி

ணீ

தண்ணீர்

ணி

ணீ

ன



வானம்

னா

மைனா

ன

னா

■ சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

அருண்மொழி இன்று பல உணவு வகைகளைச் சமைத்திருக்கிறார்.

உணவுப் பொருள்களின் பெயர்களைக் கண்டறிந்து அவற்றை மட்டும் வட்டமிடவும்.

புளி	அவரை	கிண்ணம்	சக்கரம்	வெங்காயம்
பாய்	தட்டு	தக்காளி	பாயாசம்	பாலாடைக்கட்டி
முள்	பனித்துளி	பெற்றோர்கள்	குவளை	பூச்சி
பருப்பு	வெற்றிலை	பழப்பாகு	ஆலை	பொம்மை
ரொட்டி	உலகம்	தண்ணீர்	உப்பு	பூரிக்கட்டை
அரிசி	பச்சடி	பூந்தொட்டி		

■ வட்டமிட்ட உணவுப் பெயர்களைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.

எழுதிப் படிக்க.

- சாதனா மாலையைச் செய்துள்ளார்.

- நாளிதழில் செய்தி வந்துள்ளது.

- மழை பெய்கிறது.

- மாலா வயலில் வேலை செய்கிறாள்.

பயிற்றுநருக்கான வழிகாட்டுதல்:
சொற்களைப் படிக்க கற்போருக்கு உதவுங்கள். வெவ்வேறு ஒலிகளைக் கொண்ட சொற்களை எழுதச் சொல்லுங்கள்.

■ **சொற்களைக் கவனமாகப் படித்து சரியான சொல்லைக் கண்டுபிடித்து கோடிட்ட இடத்தில் எழுதுக.**

'ஒ'–இல் தொடங்கும் சொல்

ஓடு	விளையாடு	ஒட்டகம்	ஔவை

'ந்' இடம்பெற்றுள்ள சொல்

நத்தை	தேன்சிட்டு	சித்தப்பா	சந்தை

'ம்'–இல் முடியும் சொல்

சுமை	மிளகு	தவளை	சட்டம்

'ஓ'–இல் தொடங்கும் சொல்

ஔவை	ஆந்தை	ஆலை	ஓலை

'ஞ்'–இடம்பெற்ற சொல்

சாட்டை	ஊஞ்சல்	தென்னை	கத்தி

'ண்'– இடம்பெற்ற சொல்

மன்னன்	மதகு	மண்	மேசை

'ஔ'–இல் தொடங்கும் சொல்

வைகை	உலக்கை	ஔவை	ஒலி

'ங்'–இடம்பெற்ற சொல்

பேரீச்சம்	கம்பம்	பெருங்காயம்	கழனி

'ன்'– இடம்பெற்ற சொல்

வில்	மல்லிகை	கன்னம்	தமிழ்

எழிலும் பூமாலையும்

எழில், பூமாலை தொடுப்பதில் தன் அம்மாவுக்கு உதவிக் கொண்டிருந்தான். பூக்களை ஒவ்வொன்றாக எண்ணி அம்மாவிடம் கொடுத்தான். ஒவ்வொரு பூமாலையிலும் 10 பூக்கள் இருக்கும். எழில் பூக்களை எண்ணிக் கொடுத்துக்கொண்டே இருந்தான், அவனது அம்மா மாலைகளைத் தொடுத்துக்கொண்டே இருந்தாள். வாருங்கள், எத்தனை பூக்களைப் பயன்படுத்தி மாலைகள் தொடுக்கப்பட்டுள்ளன என்று கண்டுபிடிப்போம்.

5 பத்துகள்	+	1 ஒன்று	=	50 + 1 = 51 ஐம்பத்தொன்று
5 பத்துகள்	+	2 ஒன்றுகள்	=	50 + 2 = 52 ஐம்பத்திரண்டு
5 பத்துகள்	+	3 ஒன்றுகள்	=	50 + 3 = 53 ஐம்பத்துமூன்று
5 பத்துகள்	+	4 ஒன்றுகள்	=	50 + 4 = 54 ஐம்பத்துநான்கு

5 பத்துகள்	+	5 ஒன்றுகள்	=	**50 + 5 = 55** ஐம்பத்தைந்து
5 பத்துகள்	+	6 ஒன்றுகள்	=	**50 + 6 = 56** ஐம்பத்தாறு
5 பத்துகள்	+	7 ஒன்றுகள் 	=	**50 + 7 = 57** ஐம்பத்தேழு
5 பத்துகள்	+	8 ஒன்றுகள்	=	**50 + 8 = 58** ஐம்பத்தெட்டு
5 பத்துகள்	+	9 ஒன்றுகள்	=	**50 + 9 = 59** ஐம்பத்தொன்பது
5 பத்துகள்	+	10 ஒன்றுகள்	=	**50 + 10 = 60** அறுபது

■ பத்துகளையும் ஒன்றுகளையும் கூட்டுக.

60 + 1	=	61
60 + 2	=	62
60 + 3	=	63
60 + 4	=	64
60 + 5	=	65
60 + 6	=	66
60 + 7	=	67
60 +8	=	68
60 + 9	=	69
60 + 10	=	70

70 + 1	=	71
70 + 2	=	72
70 + 3	=	73
70 + 4	=	74
70 + 5	=	75
70 + 6	=	76
70 + 7	=	77
70 + 8	=	78
70 + 9	=	79
70 + 10	=	80

80 + 1	=	81
80 + 2	=	82
80 + 3	=	83
80 + 4	=	84
80 + 5	=	85
80 + 6	=	86
80 + 7	=	87
80 + 8	=	88
80 + 9	=	89
80 + 10	=	90

90 + 1	=	91
90 + 2	=	92
90 + 3	=	93
90 + 4	=	94
90 + 5	=	95
90 + 6	=	96
90 + 7	=	97
90 + 8	=	98
90 + 9	=	99
90 + 10	=	100

- விடுபட்ட எண்களை நிரப்புக.

51	52	53	54	55	56	57	58	59	60
61		63	44			67			70
71			74						
					86				
		93						99	100
101	102	103	104		106	107		109	110
111			114			117		119	
		123							130
			134				138		
141		143			146				150

- **கூட்டுக.**

$$\begin{array}{r} 70 \\ +12 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 56 \\ +13 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 46 \\ +12 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 62 \\ +36 \\ \hline \\ \hline \end{array}$$

- ஒன்றுகளின் கூட்டுத்தொகை பத்துக்கும் அதிகமானால், 'பத்து ஒன்றுகள்' ஒரு பத்தாக மாற்றப்பட்டு, பத்துகளில் சேர்க்கப்படும்.

$$\begin{array}{r} 1 \\ 46 \\ +\ 27 \\ \hline 73 \\ \hline \end{array}$$

6 ஒன்றுகள் + 7 ஒன்றுகள் சேர்ந்து 13 ஒன்றுகள்.

13 ஒன்றுகள் என்பதால் | 1 பத்து | 3 ஒன்றுகள் |

- **கூட்டுக.**

$$\begin{array}{r} 75 \\ +19 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 37 \\ +46 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 55 \\ +26 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 28 \\ +25 \\ \hline \\ \hline \end{array}$$

$$\begin{array}{r} 65 \\ +27 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 36 \\ +54 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 38 \\ +45 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 39 \\ +24 \\ \hline \\ \hline \end{array}$$

■ கழித்தல்.

$$\begin{array}{r} 7\ 5 \\ -\ 2\ 4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 3\ 8 \\ -\ 1\ 2 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 8\ 6 \\ -\ 2\ 4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 4\ 7 \\ -\ 1\ 3 \\ \hline \\ \hline \end{array}$$

குறைவான ஒன்றுகளில் இருந்து அவற்றைவிட அதிகமான ஒன்றுகளைக் கழிக்க முடியாது. எனவே பத்துகளை ஒன்றுகளாக மாற்றிக் கழிக்கிறோம்.

உதாரணம்:

54 = 10 10 10 10 10 ●●●●

54 = 10 10 10 10 ●●●●●●●●●●●●●●

$$\begin{array}{r} 5\ 4 \\ -\ 2\ 6 \\ \hline 2\ 8 \\ \hline \end{array} \qquad \begin{array}{r} \textcircled{4}\ \textcircled{14} \\ -\ 2\ \ 6 \\ \hline \\ \hline \end{array}$$

4 லிருந்து 6 ஐ கழிக்க முடியாது. எனவே, 5 பத்துகளில் 1 பத்தை எடுத்து 10 ஒன்றுகளாக மாற்றுகிறோம். இப்போது நம்மிடம் 4 பத்துகள் 14 ஒன்றுகள் உள்ளன. 14 ஒன்றுகளில் இருந்து 6 ஒன்றுகளைக் கழித்தால் 8 ஒன்றுகள் மீதம் இருக்கும். 4 பத்துகளில் இருந்து 2 பத்துகளைக் கழித்தால், 2 பத்துகள் மீதம் இருக்கும்.

■ கழித்தல்.

$$\begin{array}{r} 7\ 5 \\ -\ 2\ 4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 3\ 8 \\ -\ 1\ 2 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 8\ 6 \\ -\ 2\ 4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 4\ 7 \\ -\ 1\ 3 \\ \hline \\ \hline \end{array}$$

$$\begin{array}{r} 7\ 5 \\ -\ 2\ 4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 3\ 8 \\ -\ 1\ 2 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 8\ 6 \\ -\ 2\ 4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 4\ 7 \\ -\ 1\ 3 \\ \hline \\ \hline \end{array}$$

■ **பள்ளியில் விடுதலை நாளை முன்னிட்டு குழந்தைகளுக்கு லட்டுப் பெட்டிகள் வழங்கப்பட்டன. ஒரு பெட்டியில் நான்கு லட்டுகள் இருந்தன. 10 குழந்தைகளுக்கு ஆளுக்கு ஒரு பெட்டி கொடுக்க எத்தனை லட்டுகள் தேவை என்று தெரிந்து கொள்வோம்?**

1 குழந்தைக்கு ஒரு லட்டுப்பெட்டியில்  4 லட்டுகள் கிடைக்கும்.

அதாவது 1 முறை 4 (அல்லது) 1 பெருக்கல் 4

(அல்லது) 1 × 4 = 4 லட்டுகள்

---

2 குழந்தைகளுக்கு 2 லட்டுப்பெட்டிகள்  கிடைக்கும்.

4 + 4 லட்டுகள்

அதாவது 2 முறை 4

(அல்லது) 2 × 4 = 8 லட்டுகள்

---

3 குழந்தைகள் சேர்ந்து 3 லட்டுப்பெட்டிகள்  பெறுவார்கள்.

4 + 4 + 4 (அல்லது) 3 முறை 4

(அல்லது) 3 × 4 = 12 லட்டுகள்

---

4 குழந்தைகளுக்கு 4 லட்டுப்பெட்டிகள்  கிடைக்கும்.

4 + 4 + 4 + 4 அதாவது 4 முறை 4

(அல்லது) 4 X 4 = 16 லட்டுகள்

---

5 குழந்தைகளுக்கு 5 பெட்டிகள்  கிடைக்கும். ஒரு பெட்டியில் 4 லட்டுகள் இருக்கும். 4 + 4 + 4 + 4 + 4 அதாவது 5 முறை 4

அல்லது 4 X 5 = 20 லட்டுகள்

ஏழு குழந்தைகளுக்கு எத்தனை லட்டுகள் கிடைக்கும்?

4 + ___ + ___ + ___ + ___ + ___ + ___

___ முறை ___	அல்லது	___ × ___ = ___ லட்டுகள்

பத்து குழந்தைகளுக்கு எத்தனை லட்டுகள் கிடைக்கும்?

4 + ___ + ___ + ___ + ___ + ___ + ___ + ___ + ___ + ___

___ முறை ___ அல்லது ___ × ___ = ___ லட்டுகள்

■ பெருக்கல்.

$$\begin{array}{r} 5 \\ \times\ 4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 4 \\ \times\ 3 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 5 \\ \times\ 5 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 3 \\ \times\ 4 \\ \hline \\ \hline \end{array}$$

■ பைகளைக் கணக்கிடுவோம்.

1 கட்டில் 100 பைகள் எனில் 1 முறை 100	1× 100 = 100 பைகள்
2 கட்டில் 100 பைகள்  எனில் 2 முறை 100	2× 100 = 200 பைகள்
	3× 100 = 300 பைகள்
	4 × 100 = 400 பைகள்
	5 × 100 = 500 பைகள்
	6 × 100 = 600 பைகள்
	7 × 100 = 700 பைகள்
